# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8073040

C

1. District : கோயம்புத்தூர் மாவட்டம் | PS: ஊ.த.க.(பிரி) காவல்நிலையம் | Year: 2019 ஆண்டு | FIR No.: 05/2019/AC/CB மு.த.அ. எண் | Date: 01.03.2019 at 1600 hrs. நாள்

2. (i) Act சட்டம்: P.C. Act 1988 as amended by Prevention of Corruption (amendment) Act 2018. | Sections பிரிவுகள்: 7(a), 7(a) r/w 12
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Criminal Procedure Code. | Sections பிரிவுகள்: 41 r/w 102 Cr.P.C.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : 28.02.2019 நாள் முதல் | Date to : 28.02.2019 நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : [illegible] நேரம் முதல் | Time to : 2020 hrs. நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.03.2019 | Time நேரம் : 1600 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 01.03.2019 G.D. VOL II | Time நேரம் : 1600 hrs.

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — [illegible] 15 கி.மீ. தொலைவில்
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி — தொண்டாமுத்தூர் ஊராட்சிமன்ற அலுவலகத்தில் வைத்து
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. [illegible]
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : நாட்டினம் இந்தியா
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் : [illegible]
   (g) Address முகவரி : [illegible] கோயம்புத்தூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   எதிரிகள் :- 1. திரு. செல்வராஜ், ஊராட்சி செயலாளர், தொண்டாமுத்தூர், கோவை மாவட்டம்
   2. திரு. முகமது அப்துல் காதர், உதவியாளர், தொண்டாமுத்தூர் ஊராட்சி அலுவலகம், கோவை மாவட்டம்.
   3. திரு. ராஜகோபால் S/o நாராயணன், 2/1-[illegible], கோவை-41.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 1/3/2019 (Dy. I.C.O. [illegible])

[signature] 01.03.2019.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01.03.2019.

Name: பெயர் J. [illegible]
Rank: நிலை [illegible] No: எண் .........
[illegible handwriting]

<u>பணிந்து சமர்பிக்கப்படுகிறது</u>

இன்று 01.03.2019 ம் தேதி மாலை 16.00 மணிக்கு கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.J.பிரபுதாஸ் ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருமதி.ஜி.பேபிபாலா, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், கோயமுத்தூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.5/2019/AC/CB u/s 7(a), 7(a) r/w 12 of PC Act 1988 as amended by Prevention of corruption (Amendment) Act 2018 & 41 r/w 102 Cr.P.C. ஆக வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் ஜி.பேபிபாலா, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயமுத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயமுத்தூர் ந.க.எண்.40/2019, நாள்.01.03.2019 அய்யா, பொருள்– திடீர் ஆய்வு – கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் பத்திர எழுத்தர்களிடமிருந்து ஆறுமுகம் என்பவர் மூலம் கையூட்டு பெற்றது. தக்க நடவடிக்கை கோருவது – சம்மந்தமாக 28.02.2019 ம் தேதி கோயமுத்தூர் மாவட்டம் தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்வதற்கும் வில்லங்க சான்று பெறுவதற்கும் வருகை தரும் பொதுமக்களிடமிருந்தும், பத்திர எழுத்தர்களிடமிருந்தும் ஆறுமுகம் என்பவர் மூலமாகவும், சார்பதிவாளரின் அலுவலக கட்டிடத்தின் முன்புறம் அமைந்துள்ள விஷ்ணு ஸ்டோர்ஸ் கடைகாரார் திரு.முருகேசன் என்பவர் மூலமாகவும் கையூட்டு பணம் பெற்று அப்பணத்தை சார்பதிவாளர் அவர் அலுவலகத்திற்கு வரும் காரில் உள்ள அவரது டிபன் பாக்ஸ் வைக்கும் பேக்கில் வைத்து சார்பதிவாளர் பணி முடித்து வீட்டிற்கு செல்லும்போது எடுத்து செல்வதாகவும், கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் பேரிலும் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.J.பிரபுதாஸ் காவல் ஆய்வாளர் மற்றும் காவலர்கள் அடங்கிய குழுவினருடன் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தை திடீர் ஆய்வு செய்வதற்காக மாலை 03.45 மணி முதல் கண்காணித்து கொண்டிருந்தபோது ஆறுமுகம் என்பவர் மாலை சுமார் 7 மணியளவில் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு தென்புறம் சார்பதிவாளர் அலுவலகம் அமைந்துள்ள தென்றல் வணிகவளாகத்தின் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த TN 38 CK 1756 என்ற பதிவெண் கொண்ட i-20 கிரே நிற கார் அருகே ஒரு நீல நிற லன்ச் பேக்குடன் சென்று காரின் உள்ளே அதை வைத்துவிட்டு வந்து பின்னர் அருகில் இருந்த விஷ்ணு ஸ்டோர்ஸ் கடையில் திரு.முருகேசனிடம் காரின் சாவியை கொடுத்துவிட்டு மீண்டும் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் நுழைந்தும் அதன் பின்னர் அந்த வணிக வளாகத்திற்குள் அமைந்துள்ள பத்திர எழுத்தர் அலுவலகங்களுக்கு சென்றும், மீண்டும் சார்பதிவாளர் அலுவலகத்தின் முன்புறம் உள்ள விஷ்ணு ஸ்டோர்ஸ் அருகே நின்று அந்த கடையிலிருந்த திரு.முருகேசனிடம் பேசிக் கொண்டிருந்த சமயத்தில் இரவு சுமார் 20.20 மணிக்கு திடீர் ஆய்வு குழுவினருடன் சென்று அறிமுகம் செய்துகொண்டு அவரை சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் அழைத்து வரப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் வடக்கு பார்த்தவாறு அமைந்துள்ள

சார்பதிவாளரின் இருக்கைக்கு மேற்கே இருந்த உதவியாளரின் இருக்கைக்கு அருகில் சார்பதிவாளர் அமர்ந்து கணினியில் பணிகளை பார்த்து கொண்டிருந்தார். மேலும் அந்த அலுவலகத்தில் உதவியாளர் திரு.முகமது அப்துல் காதர் மற்றும் அலுவலக உதவியாளர் திருமதி.விஜயலட்சுமி ஆகியோர் இருந்தார்கள். மேலும் அந்த அறையில் இருந்த திரு.குப்புராஜ் வயது 53 த/பெ திருமலைசாமி செட்டியார், க.எண். 3/57 சிறுவாணி மெயின் ரோடு மத்ராயபுரம் கோவை, திரு.ஜெர்லின் கரோல் வயது 31, த/பெ சமாதானம், க.எண்.15, 2வது தளம் இந்தியா டவர் கோபாலபுரம் கோயமுத்தூர், திரு.ஜெயகுமார் வயது 50 3/122 பெருமாள் கவுண்டர் வீதி, தொட்டில்பாளையம் கோவை மற்றும் திரு.பழனிசாமி வயது 41 த/பெ சுப்பராயன், 7/120 மேட்டுகாடு, பவித்திரம், ஆலந்துறை கோவை ஆகியோர்கள் நின்று கொண்டிருந்தனர். மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர் ஆகிய நான், காவல் ஆய்வாளர் திரு.பிரபுதாஸ் மற்றும் குழுவினருடன் சார்பதிவாளரிடம் திடீர் தணிக்கை பற்றி தகவல் தெரிவித்தும் அலுவலகத்திற்கு வெளியிலிருந்து அழைத்து வந்த திரு.ஆறுமுகம் என்பவரை விசாரிக்க தான் மேற்படி அலுவலகத்தில் கடந்த 5 ஆண்டுகளாக புக் பைண்டிங் செய்து கொடுப்பதாகவும், சார்பதிவாளருக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் தேவையான வேலைகளை செய்து கொடுத்து வருவதாகவும் மற்றும் சார்பதிவாளர் திரு.செல்வராஜ் அவரின் உத்தரவின் பேரில் பத்திர எழுத்தர்களிடமிருந்து அவர்கள் சார்பதிவாளருக்கு கொடுக்க வேண்டிய மாமூல் பணத்தை பெற்று வந்து அதனை சார்பதிவாளரின் லன்ச் பேக்கில் வைத்து மேற்படி லன்ச் பேக்கை அவர் உபயோகித்து வரும் காரில் வைத்து அவரிடம் ஒப்படைப்பது மற்றும் அந்த காரின் சாவியை சார்பதிவாளரின் அலுவலக கட்டிடத்தின் நுழைவு வாயிலுக்கு அருகில் உள்ள விஷ்ணு ஸ்டோர்ஸ் கடைகாரர் திரு.முருகேசனிடம் சாவியை கொடுத்து விடுவதாகவும், பணி முடித்து மாலை சார்பதிவாளர் வீட்டுக்கு செல்லும்போது மேற்படி கடைகாரர் காரை நிறுத்தப்பட்ட இடத்தில் இருந்து ஓட்டி வந்து அலுவலகம் முன்பாக நிறுத்திவிட்டு சார்பதிவாளரிடம் காரின் சாவியையும், அவர் தான் தனியாக வசூல் செய்யப்பட்ட பணத்தையும் கொடுப்பார் என்றும் சொன்னார். தனக்கு வாரம் ரூ.2500/– சம்பளமாக சார்பதிவாளர் திரு.செல்வராஜ் அவர்கள் அவரது சொந்த பணத்தில் இருந்து தருவார் என்றும் சொன்னார். மேலும் அவரிடம் இன்று பத்திர எழுத்தர்களிடமிருந்து பெற்ற மாமூல் பணம் பற்றி விசாரிக்க அவர் தானாகவேஅவரது பேண்ட்டின் வலது புற பாக்கெட்டிலிருந்து இரண்டு காக்கி நிறம் மற்றும் ஒரு வெள்ளை நிற கவர்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த கவர்களை பார்வையிட்டதில் ஒரு காக்கிநிற கவரின் மேல் லோகேஸ்வரி என்று பென்சிலால் எழுதப்பட்டிருந்தது. அதனை திறந்து பார்க்க அதில் 5 எண்ணிக்கை கொண்ட ரூ.500/– ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் ரூ.2500/– இருந்தது. மேலும் மற்றொரு காக்கிற கவரின் மேல் அன்னக்கொடி என்று பென்சிலால் எழுதப்பட்டிருந்தது. அதனை திறந்து பார்க்க அதில் 6 எண்ணிக்கை கொண்ட ரூ.2000/– ரூபாய் நோட்டுக்களும், 40 எண்ணிக்கை கொண்ட ரூ.500/– ரூபாய் நோட்டுக்களுமாக மொத்தம் ரூ.32000/– இருந்தது. மேலும் வெள்ளை நிற கவரின் மேல் DC என்று பேனாவால் எழுதப்பட்டிருந்தது. அதனை திறந்து பார்க்க அதில் 20 எண்ணிக்கை கொண்ட ரூ.2000/– ரூபாய் நோட்டுக்களும், 37 எண்ணிக்கை

கொண்ட ரூ.500/– ரூபாய் நோட்டுக்களுமாக மொத்தம் ரூ.58500/– மும் ஆக மொத்தம் மூன்று கவர்களிலும் பணம் ரூ.93,000/– இருந்தது. மேற்படி ரூபாய் நோட்டுக்களை பற்றி கேட்க சார்பதிவாளர் திரு.செல்வராஜ் அவர்களின் உத்தரவுபடி மேற்படி கவர்களில் குறிக்கப்பட்ட பத்திர எழுத்தர்களிடமிருந்து வசூல் செய்த தொகை என்றும், அதனை பெற்று கொண்டு சார்பதிவாளர் வீட்டிற்கு செல்லும் நேரமானதால் அவர் செல்லும் காரின் சாவியை வைத்திருக்கும் விஷ்ணு ஸ்டோர்ஸ் கடை நடத்தி வரும் திரு.முருகேசனிடம் பேசிய பின்பு வசூல் செய்த பணத்தை சார்பதிவாளர் திரு.செல்வராஜ் அவர்களிடம் கொடுக்கலாம் என்று அலுவலகத்திற்குள் வர நின்று கொண்டிருந்த போது தாங்கள் என்னை விசாரித்து அலுவலகத்திற்குள் அழைத்து வந்ததாகவும் சொன்னார். மேற்படி பணத்தையும் பணம் வைக்கப்பட்ட கவர்களையும் விசாரணைக்காக ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. மேலும் இன்று காலை முதல் பத்திர எழுத்தர்களிடமிருந்து வசூல் செய்த மாமூல் தொகை வேறு ஏதும் உள்ளதா என்று கேட்க, அவர் சார்பதிவாளர் திரு.செல்வராஜ் அவர்களின் உத்தரவின் பேரில் 9 பத்திர எழுத்தர்களிடமிருந்து பெற்ற மொத்த பணம் ரூ.32000/–ல் டெய்லர் மற்றும் மளிகை செலவு செய்த பணம் ரூ.1500/– போக மீத தொகை ரூ.30500/–ம் மற்றும் எந்த பத்திர எழுத்தரிடமிருந்து வசூல் செய்யப்பட்டது என்ற விபரத்தினை துண்டு சீட்டில் எழுதி அதனை அலுவலகத்தில் இருந்த பழைய வெள்ளை பேப்பரில் சுற்றி வைத்து மேற்படி பணத்தினை சார்பதிவாளரின் லன்ச் பேக்கில் வைத்து மேற்படி லன்ச் பேக்கை சார்பதிவாளர் உபயோகித்துவரும் காரில் இரவு சுமார் 7 மணியளவில் வைத்ததாகவும் தெரிவித்தார். பின்னர் கார் சாவியை கடையில் முருகேசனிடம் கொடுத்ததாகவும் சொன்னார். பின்னர் சார்பதிவாளர் உதவியாளர் திரு.முகமது அப்துல் காதருடன் கணினியில் வேலை பார்த்து கொண்டிருந்த டேபிளை தொட்டாற்போல் வடக்கு பார்த்து போடப்பட்டிருந்த உதவியாளர் திரு.முகமது அப்துல் காதரின் இருக்கையின் முன்பாக இருந்த மர மேஜையின் வலது பக்க டிராயரில் இருந்து எடுக்கப்பட்ட பணம் ரூ.2950/– (500 X 5, 200 X 1 , 100 X 2, 50 X 1) ஐ பற்றி உதவியாளர் திரு.முகமது அப்துல் காதரிடம் கேட்க அவர் அந்த டேபிளை தற்போது பயன் படுத்தி வருவதில்லை என்றும் அந்த பணத்தை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார். எனவே மேற்படி பணத்தை விசாரணைக்காக காவல் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. மேலும் அவரை விசாரிக்க தான் தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த ஏப்ரல் 2018 முதல் உதவியாளராக பணிசெய்து வருவதாக சொன்னார். அவர் இன்று கொண்டு வந்த சொந்த பணத்தை பற்றி கேட்டபோது தான் ரூ.300/– கொண்டு வந்ததாகவும் அதனை செலவு செய்து விட்டதால் தற்போது பணம் ஏதும் இல்லை என்றும் சொன்னார். பின்னர் சார்பதிவாளரை விசாரிக்க அவரது பெயர் செல்வராஜ் என்றும் தான் இந்த அலுவலகத்தில் 01.08.2017 முதல் தொண்டாமுத்தூர் சார்பதிவாளராக பணி செய்து வருவதாகவும் சொன்னார். அவர் இன்று கொண்டு வந்த சொந்த பணம் பற்றி கேட்க அவர் ரூ.150/– கொண்டு வந்ததாகவும் அதனை செலவு செய்துவிட்டதால் தற்போது பணம் ஏதும் இல்லை என்று சொன்னார். மேலும் ஆறுமுகத்திடமிருந்து கைப்பற்றப்பட்ட மூன்று கவர்களில் உள்ள பணம் பற்றி கேட்க சார்பதிவாளர் அதைபற்றி பதில் தெரிவிக்க

மறுத்து விட்டார். திரு.ஆறுமுகம் கொடுத்த தகவலின் பேரில் சார்பதிவாளரின் காரின் சாவியை கொடுத்து வைத்த விஷ்ணு ஸ்டோர்ஸ் கடைக்கு துணை ஆய்வுகுழு அலுவலர், காவல் ஆய்வாளர், சார்பதிவாளர் திரு.செல்வராஜ், திரு.ஆறுமுகம் மற்றும் குழுவினர்களையும் அழைத்து கொண்டு விஷ்ணு ஸ்டோருக்கு சென்று பார்க்க அங்கு கடை உரிமையாளரின் மனைவி திருமதி.எம்.ராணி என்பவர்தான் இருந்தார் அவரிடம் அவரது கணவரை பற்றி விசாரிக்க தான் காய்கறி வாங்கிவிட்டு கடைக்குள் வந்தபோது தனது கணவர் திரு.முருகேசனும் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணி செய்யும் ஆறுமுகமும் பேசிக்கொண்டிருந்ததாகவும் பின்னர் தனது கணவர் தன்னிடம் ஏதும் சொல்லாமல் வெளியில் சென்று விட்டதாகவும் சொன்னவரிடம் அவரது கணவருக்கு தகவல் தெரிவித்து வர சொல்ல தனது கணவர் அவரது இரண்டு செல் போன்களையும் கடையிலேயே வைத்துவிட்டு சென்று விட்டதாகவும் சொன்னார். சார்பதிவாளரின் காரின் சாவியை எடுத்து தருமாறு கேட்க தேடி பார்த்துவிட்டு அது கடையில் இல்லை என்றும் தனது கணவர் எங்கு வைத்தார் என்று தெரியவில்லை என்றும் தெரிவித்தார். வெகு நேரம் காத்திருந்தும் அவர் வராததால் சார்பதிவாளரிடம் காரின் கதவை திறக்க டூப்ளிகேட் சாவியை கேட்க அவர் தகவல் தெரிவித்து டூப்ளிகேட் சாவியை அவரது உறவினர் திரு.ஜானகிராமன் என்பவர் கணுவாயிலிருந்து கொண்டு வந்து தொண்டாமுத்தூர் சார்பதிவாளரிடம் கொடுக்க மேற்படி காரின் சாவியை கொண்டு மேற்படி குழுவினருடன் தென்றல் வணிக வளாகத்திற்கு சொந்தமான பார்க்கிங்கில் நிறுத்தியிருந்த காரின் கதவை இரவு சுமார் 21.40 மணிக்கு திறந்து பார்க்க ஓட்டுனரின் அருகே உள்ள முன்பக்க இருக்கையில் வைக்கப்பட்டிருந்த SignoraWare என்று வெள்ளை நிற எழுத்தால் எழுதப் பட்டிருந்த நீல நிற லன்ச் பேக்கினை திறந்து பார்க்க அதில் பதிவு அலுவலகத்தின் ஒரு பழைய பேப்பரில் சுற்றப்பட்ட பணம் கத்தையாக இருந்தது அதனை எண்ணி பார்க்க ரூ.30,500/– ம் (2000 X 10, 500 X 21) என இருந்தது. அதனுடன் சில பெயர்கள் எழுதப்பட்ட துண்டு சீட்டு ஒன்றும் இருந்தது. அந்த துண்டு சீட்டில் 27/ லோகேஸ்வரி கவர், காந்திமதி–2000, மணிகண்டன்–1000, 28/ செந்தில்குமார்–500, புவனேஸ்வரன்–1000, ஞானவேல்–10,000, 1461–500, கார்த்தி அஞ்சலி–15,000, காந்திமதி–2000, டெய்லர் 500+400–900, மளிகை–600 என பென்சிலால் திரு.ஆறுமுகத்தால் எழுதப்பட்டிருந்தது தெரியவந்தது. மேற்படி பணத்தை பற்றி சார்பதிவாளர் திரு.செல்வராஜிடம் விவரம் கேட்க அவர் அதை பற்றி விபரம் சொல்ல மறுத்து விட்டார். எனவே மேற்படி பணத்தையும் பென்சிலால் எழுதப்பட்ட துண்டு சீட்டையும் நீல நிற பேக்கையும் விசாரணைக்காக ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த காரின் டேஸ் போர்டில் ஒரு காக்கி நிற கவர் இருந்தது அதனை பிரித்து பார்க்க சார்பதிவாளர் திரு.செல்வராஜ் துணை பதிவு துறை தலைவர் அவர்களுக்கு தொடர்ந்து தொண்டாமுத்தூர் சார்பதிவாளராகவே பணிபுரிய வேண்டி கணினியில் டைப்செய்யப்பட்ட மனு இரண்டு நகல்கள் இருந்தன. மேற்படி மனுவின் இரண்டு நகல்களையும் விசாரணைக்காக ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. பின்பு அலுவலகம் வந்தும் திரு.ஆறுமுகம், திரு.ஜானகிராமன் ஆகியோரின் வாக்குமூலம்

தனித்தனியாக பெறப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் நின்று கொண்டிருந்த திரு.குப்புராஜ், திரு.ஜெர்லின் கரோல் திரு.ஜெயகுமார், திரு.பழனிசாமி ஆகியோர்களின் பத்திர பதிவு செய்து அனுப்பி வைக்கப்பட்டது. மேலும் விஷ்ணு ஸ்டோர்ஸ் கடை நடத்திவரும் திரு.முருகேசனின் மனைவி திருமதி.ராணியை அழைத்து விசாரிக்க அவர் தனது கணவருடன் மேற்படி கடையை கடந்த 5 வருடமாக நடத்தி வருவதாகவும் தங்களது கடைக்கு பின்னால் தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலகம் இயங்கி வ்ருகிறது என்றும் திரு.செல்வராஜ் அவர்கள் சார்பதிவாளராக இருந்து வருகிறார் என்றும், அவருக்கும் தனது கணவருக்கும் நன்கு பழக்கமுள்ளது என்றும், சார்பதிவாளர் மாற்றுத் திறனாளியாக இருப்பதால் அலுவலகத்திற்கு காரில் வருவார் என்றும், அந்த காரை எடுத்து சென்று தனது கணவர்தான் பெரும்பாலும் பார்க்கிங் செய்வார் என்றும் காரின் சாவியை எங்கள் கடையில் வைப்பார் என்றும், மேற்படி சார்பதிவாளருக்கு உதவியாக திரு.ஆறுமுகம் என்பவர் வேலை செய்து வருகிறார் என்றும் அவர் எங்களிடம் கார் சாவியை வாங்கி சார்பதிவாளரின் சாப்பாடு பையை எடுத்து கொடுத்துவிட்டு பின்பு சாவியை எங்களிடமே கொடுப்பார் என்றும் மீண்டும் சார்பதிவாளர் வீட்டிற்கு செல்லும்போது அவரது சாப்பாட்டு பையை அவரது காரில் வைத்துவிட்டு சாவியை எங்களிடம் கொடுப்பார் என்றும் நாங்கள் எங்கள் கடையில் இருக்கும் டேபிள் டிராயரில் வைப்போம் என்றும் இன்று 28.02.2019 ம் தேதி இரவு சுமார் 7 மணியளவில் தானும் தனது கணவரும் கடையில் இருந்தபோது ஆறுமுகம் சார்பதிவாளரின் கார் சாவியை வாங்கி சார்பதிவாளரின் சாப்பாடு பையை வைத்துவிட்டு சாவியை தங்களிடம் கொடுத்ததாகவும், தான் தனது கணவரை கடையில் விட்டுவிட்டு காய்கறி வாங்க சென்று விட்டதாகவும் , தான் இரவு சுமார் 8 மணியளவில் திரும்ப கடைக்கு வந்ததாகவும் அப்போது எங்கள் கடைக்கு முன்பு தனது கணவரும் ஆறுமுகமும் பேசி கொண்டிருந்தார்கள் என்றும் அப்போது சிலர் வந்து ஆறுமுகத்தை அழைத்து சென்றதாகவும் பின்பு தன்னிடம் வந்த அவர்கள் லஞ்சஒழிப்பு போலீசார் என்று சொல்லி தனது கணவரை பற்றி விசாரித்தார்கள் என்றும் தனது கணவர் வெளியில் சென்றுவிட்டதாகவும் சார்பதிவாளரின் கார் சாவியை அவர்கள் கேட்க எங்கள் கடையில் தேடி பார்த்தபோது கார் சாவி இல்லை என்றும் தனது கணவர் கார் சாவியை எடுத்து சென்று விட்டதாகவும் அவர் எங்கு சென்றார் என்று தெரியவில்லை என்றும் சார்பதிவாளரின் முன்னிலையில் சொன்னார். மேலும் திருமதி.ராணி கடையை பூட்டிவிட்டு அவசரமாக செல்ல வேண்டும் என்று கேட்டுகொண்டதால் அவரை அனுப்பி வைக்கப்பட்டது. மேலும் தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலக பணியாளர்களின் பணக்கையிருப்பு அசல் பதிவேடு ஆரம்பம் 01.01.2019 முதல் பக்கம் 1 முதல் 200 வரை கொண்டது, தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலக பணியாளர்களின் வருகை பதிவேடு ஜனவரி மற்றும் பிப்ரவரி 2019 ம் மாதத்திற்கான பக்கம் 1 முதல் 6 வரை கொண்டது, தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலக பணியாளர்களின் தாமத வருகை பதிவேடு பக்கம் 1 முதல் 6 வரை கொண்டது, மற்றும் இன்றைய தினம் பதிவு செய்யப்பட்ட பதிவுகள் அடங்கிய ஏ–கணக்கு விபரங்கள் கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டு மேற்படி ஆவணங்களின் நகல்களில் சார்பதிவாளரிடம் சான்றொப்பம்

பெறப்பட்டு மேற்படி ஆவணங்களை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் ஆய்வின் போது மொத்தம் பணம் ரூ.1,26,450/– காவல் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் தணிக்கை 28.02.2019ம் தேதி இரவு 2020 மணிக்கு ஆரம்பித்து 01.03.2019 ம் தேதி 0100 மணிவரை முடிக்கப்பட்டது. இத்துடன் காவல் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டு என்னிடம் கொடுக்கப்பட்ட பணம் ரூ.1,26,450/– மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் கொடுத்தவர்களின் பெயர்கள் அடங்கிய துண்டு சீண்டு ஒன்று மற்றும் பணம் வைக்கப்பட்டிருந்த இரண்டு காக்கி நிற கவர்கள், ஒரு வெள்ளை நிற கவர், பணம் வைக்கப்பட்டிருந்து நீல நிற லன்ச் பேக், காக்கி நிற கவரில் இருந்த சார்பதிவாளரது 2 விண்ணப்ப மனு மற்றும் ஜானகிராமன், ஆறுமுகம் ஆகியோர்களது வாக்குமூலங்களின் அசல் மற்றும் திடீர் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட நடவடிக்கை ஆகியவற்றை ஒப்படைக்கிறேன். திடீர் ஆய்வின் போது மேலே சொன்னவாறு கண்டுபிடிக்கப்பட்ட முறைகேடுகள் சம்மந்தமாக கோயமுத்தூர் தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் திரு.செல்வராஜ், உதவியாளர் திரு.முகமது அப்துல் காதர், திரு.நா.ஆறுமுகம், த/பெ நாராயணன், 2/1–சி வி.என்.ஆர் நகர், வடவள்ளி, கோவை–41 ஆகியோர்கள் மீது நடிவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள (XXXXX) ஜி.பேபிபாலா. இணைப்பு– மேற்சொன்னவாறு. Sir, Today on 01.03.2019 at 1600 hrs received a complaint from Tmt.G.Babybala, Deputy Inspection Cell Officer, Coimbatore District and registered a case in Coimbatore V&AC Crime.No.5/2019/AC/CB u/s 7(a), 7(a) r/w 12 of PC Act 1988 as amended by Prevention of corruption (Amendment) Act 2018 & 41 r/w 102 Cr.P.C. by me. Sd/- (xx xx) 01/03/2019 J.Prabudass, Inspector of Police, V&AC, Coimbatore. இதன் முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகலையும், கோயமுத்தூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் கொடுத்த புகாரையும், திடீர் ஆய்வின் நடவடிக்கையையும், ஆறுமுகம் மற்றும் ஜானகிராமன் ஆகியோரின் வாக்குமூலங்களையும் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம் கோயமுத்தூர் அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

(J.பிரபுதாஸ்) 01/03/2019

காவல் ஆய்வாளர்

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு

கோயமுத்தூர்